நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 48/2022

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சின்னசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | மணக்காடு |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**A1 and A3 absent. A2 present. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.50PM)

1. முனியன் மற்றும் ராமசாமி ஆகிய இருவரும் மேட்டூர் உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் அ.வ.எண்.35/2021 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து விசாரணை நடைபெற்று வருகின்றது என்றால் சரிதான். அந்த வழக்கில்

குப்புசாமி, பொன்னுசாமி, நான் மற்றும் பழனியப்பன் ஆகியோர் பிரதிவாதிகள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நானோ, எனது ஆட்களோ அவர்களது சொத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான்.

2. அந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் நான் இந்த வழக்கில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறுதான் காவல் துறை விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அந்த சிவில் வழக்கு தாக்கல் செய்யும்போது கிருஷ்ணமூர்த்தி என்ற துணை கண்காணிப்பாளர் பணியில் இருந்தார் என்றால் சரிதான். அப்போது உதவி ஆய்வாளர் விக்னேஷ்வரமூர்த்தி என்பவரும் மேட்டுர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தார் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கிற்கு முன்பாக மேற்படி அசல் வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களுக்கு மேற்படி துணை கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகிய இருவரையும் அழைத்துச்சென்று காண்பித்தேன் என்றால் சரிதான். கொலை வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்களை மேற்படி போலீசாருடன் அழைத்துச்சென்று தடத்தில் போகக்கூடாது என்று பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.

4. மேலும் அப்போது உதவி ஆய்வாளர் விக்னேஷ்வரமூர்த்தி விறகுக்கட்டையை எடுத்து 1ம் எதிரி முனியன் என்பவரின் மனைவியையும், ராமசாமி என்பவரின் மனைவியையும் அடித்து காயத்தை ஏற்படுத்தி அதை அங்கிருந்த நபர் புகைப்படம் எடுத்து அதனை எதிரி முனியன் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்காததால் முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல.

5. உதவி ஆய்வாளர் குச்சியை எடுத்தார் ஆனால் யாரையும் அடிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பெண் 1ம் எதிரி முனியன் என்பவரின் மனைவி என்றால் சரிதான். மற்றொரு புகைப்படத்தில் இருப்பது உதவி ஆய்வாளர் விக்னேஷ்வரமூர்த்தி என்றால் சரிதான். மேற்படி 1ம் எதிரி முனியன் என்பவரின் மனைவி மாரியம்மாள் என்பவரின் புகைப்படத்தில்

இரத்தக்காயங்களுடன் காணப்படுகிறார் என்றால் சரிதான். அந்த காயங்களை அவர்களாகவே ஏற்படுத்திக்கொண்டார்கள். ( **மேற்படி 1 ம் எதிரி முனியன் என்பவரின் மனைவி உள்ள புகைப்படம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உதவி ஆய்வாளர் விக்னேஷ்வரமூர்த்தி இருப்பதாக சொல்லப்படும் புகைப்படம் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. இந்த சம்பவத்திற்கு பிறகு உதவி ஆய்வாளர் விக்னேஷ்வரமூர்த்தியை பணியிட மாற்றம் செய்துவிட்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், எதிரிகளுக்கும் தடத்தை பயன்படுத்துவதுதான் பிரச்சனை. நான் எதிரிகள் காட்டுக்கு செல்லும் குடிநீர் பைப் மற்றும் விவசாய பாசன பைப் ஆகியவற்றை நானும், எனது பங்காளிகளும் உடைத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

7. இதுசம்மந்தமாகத்தான் பைப்பை உடைத்துவிட்டதாக என்மீது புகார் கொடுத்தார்கள் என்றால் அவ்வாறு கொடுக்கவில்லை. அதுதான் எங்களுக்கு இடையேயான பிரச்சனை என்றாலும், தண்ணீர் குழாய் உடைத்துவிட்டு மேற்படி எதிரிகளை நிலத்தை விற்றுவிட்டுப்போக கட்டாயப்படுத்தி வருகிறோம் என்றாலும் அதனடிப்படையில் தான் இந்த பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. தற்போது எனது பங்காளிகளுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டு குற்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு வந்து கையெழுத்து செய்கிறேன் என்றால் சரிதான். ஒவ்வொருவரையும் தடத்தை பயன்படுத்தக்கூடாது, குடிநீர் எடுத்துச்செல்லக்கூடாது என்று தடுத்து பிரச்சனை செய்வதுதான் எங்களுடைய வாடிக்கை என்றால் சரியல்ல.

9. எனது பங்கு நிலத்தில் தான் இந்த சம்பவம் நடைபெற்றது. வையாபுரியின் இடம் சம்பவயிடத்திற்கு தெற்கு திசையில் உள்ளது. மேற்படி நான் சொல்லும் பைப் லைன் கிழக்கு மேற்காக செல்கிறது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். காவல் துறை விசாரணையில் 05.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொன்னேன்.

10. சம்பவத்தன்று மாலை 06.00 மணி சுமாருக்கு புகார் கொடுத்தேன். புகாரை உதவி ஆய்வாளர் விக்னேஷ்வரமூர்த்தி தான் எழுதிக் கொடுத்திருப்பார் என்று நினைக்கிறேன். சம்பவயிடத்தை யார் போலீசாருக்கு அடையாளம் காட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. எங்களை தொண்ணையில் தான் அடித்தார்கள். தொண்ணை என்றாலும், விறகு கட்டை என்றாலும் ஒன்றுதான்.

11. சம்பவயிடத்திலிருந்து எங்களை தாக்க பயன்படுத்திய 20–30 தொண்ணைகளை சுமையாக கட்டி எடுத்துவந்தார்கள். யார் எடுத்து வந்தார்கள் என்றும், யார் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. சம்பவத்தன்று இரவு என்னிடம் அரசு மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் வாங்கினார்கள்.

12. அதன்பிறகு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. என் அண்ணன் வீட்டு பையன் சுரேஷ் மற்றும் இரண்டு மூன்று பையன்கள் என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். மருத்துவரிடம் என்னை 3 பேர் அடித்ததாக சொன்னேன். தொண்ணையில் அடித்ததாகத்தான் மருத்துவரிடம் சொன்னேன்.

13. சம்பவயிடத்தில் சுமார் 20 நபர்கள் இருந்தார்கள். இந்த வழக்கில் அ.சா.2 லட்சுமி எனது மனைவி ஆவார். அ.சா.3 சின்னத்தம்பி எனது உறவினர். அ.சா.4 கனகராஜ் எனது தம்பி மகன் ஆவார். அ.சா.5 பழனியப்பன் என்பவர் எனது தம்பி என்றால் சரிதான். ஜெயப்பிரியா என்பவர் திருப்பூரில் உள்ளார். அவர் பழனியப்பனின் மருமகள் என்றால் சரிதான். திருப்பூரில் தான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் இருந்தார் என்றால் சரிதான்.

14. மாணிக்கம் என்பவர் தான் டிரேக்டர் ஓட்டியவர் என்றால் சரிதான். சாந்தி என்பவர் பழனியப்பனின் மகள் என்றால் சரிதான். சம்பவத்தின்போது அவர் அங்கு இல்லை. சாந்தியின் மருமகனும் தனபால் என்பவரும் சம்பவத்தின்போது அங்கு இல்லை. ராமசாமி என்பவரும் பங்காளி என்றால் சரிதான். அவரால் தான் பிரச்சனை. அடித்துவிட்டு ஓடி ஒளிந்துக்கொண்டார். ராமசாமியின் மகன் தனபழனி என்பவர் ஆவார். அவரும் அடித்துவிட்டு ஓடி ஒளிந்துக்கொணடார்.

15. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நானும், துணைகண்காணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, உதவி ஆய்வாளர் விக்னேஷ்வரமூர்த்தி ஆகியோருடன் சேர்ந்துக்கொண்டு நடக்காத ஒரு சம்பவத்தை நடந்தது போல் உருவாக்கி விக்னேஷ்வரமூர்த்தி மீது இருந்த புகாரை கருத்தில்கொண்டு எதிரிகளுக்கு சம்மந்தம் இல்லாத ஒரு பிரச்சனையை உருவாக்கி வழக்கை ஜோடித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(06.33PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 48/2022

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | லட்சுமி |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னசாமி |
| கிராமம் | : | மணக்காடு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**A1 and A3 absent. A2 present. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–(06.35 )

1. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் காவல் துறை விசாரணையிலும் சொன்னேன். போலீசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அடித்தவுடன் எனக்கும், எனது கணவருக்கும் மயக்கம்

வந்துவிட்டது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு வந்து ஊசிப்போட்டு சிகிச்சையளித்த பின்னர் தான் மயக்கம் தெளிந்தது. எவ்வளவு நேரம் கழித்து மயக்கம் தெளிந்தது என்று குறிப்பாக தெரியாது.

2. எனக்கு மயக்கமாக இருந்ததால் என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்றார்கள் என்று தெரியாது. சம்பவயிடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். மருத்துவரிடம் 3 நபர்கள் அடித்ததாக நான் சொன்னேன். தொண்ணையால் அடித்ததாக சொன்னேன். மருத்துவரிடம் நான் மேற்படி விவரங்களை சொல்லும்போது எனக்கு நினைவிருந்தது.

3. சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் என்னை விசாரித்தனர். எவ்வளவு நேரத்தில் என்னை போலீசார் விசாரித்தனர் என்று எனக்கு தெரியாது. அதன்பின்னிட்டு போலீசார் என்னிடம் ஏதாவது விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்று தெரியாது. விறகு கட்டை வேறு தொண்ணை என்பது வேறு என்றால் சரியல்ல. அது எவ்வளவு நீளம், எவ்வளவு தடிமன் என்று எனக்கு தெரியாது. அந்த விறகு கட்டையை போலீசாரிடம் நான் அடையாளம் காட்டவில்லை.

4. ஜெயப்பிரியா யார் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் நிலத்திற்கு பொதுதடத்தில் செல்லும் தண்ணீர் குழாயை நாங்கள் உடைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதுதான் பிரச்சனை என்றால் சரியல்ல. மாடு பிடிக்க செல்லும்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது. எங்களது காட்டிற்கு மேற்கு பக்கமாக வையாபுரியின் நிலம் உள்ளது.

5. சின்னதம்பி காட்டிலிருந்து வையாபுரி காட்டிற்கு நான் செல்ல ஏறும்போது பிரச்சனை ஏற்பட்டது. நான் சொன்னது பொய் என்றாலும், நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சிவில் வழக்கு நடைபெற்று வரும் நிலையில் அந்த வழக்கை விட்டுவிடச்சொல்லி போலீசார் மூலம் அழுத்தம் கொடுத்து, போலீசாரை வைத்து முனியன் குடும்பத்தாரை தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக போலீசாரே சொல்லிக்கொடுத்து ஒரு வழக்கை உருவாக்கி என்னை பொய் சாட்சியம் அளிக்க முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்

என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அதற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(06.45PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**